06. சின்னப்பூ நானல்லவோ (பாரம்பரியப் பாடல்)
இயல், இசை: பாரம்பரியம்
பாடியவர்: விவால்டினி மதினண்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

சின்னப்பூ நானல்லவோ
தேவனே நான் சொல்லவோ
என்னை உன் பாதத்திலே
ஏற்றுக் கொண்டால் என்னவோ!

1. ஐயா! உன் தோள்களிலே
ஆடிடும் மாலையிலே
மெய்யாய் ஒரு மனதாய்
பேசும் கரம் இல்லையே!

2. உய்யும் உயிர் பிரிந்தே
ஓடிப் பறக்கும் முன்னே
தூய விரல்களிலே
தொட்டுப் பறித்தால் என்ன!

3. வண்ணம் எனக்கில்லையே
வாசம் சிறப்பில்லையே
மண்ணில் உதிரும் முன்னே
வாழ்வு கொடுத்தால் என்ன!

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Christmas 2021)**